


நகைப்பவர் யாவரும்
நண்பர்கள் ஆகார்!
தொகைப்பெருக் கென்பதும்
தோழமைக் கில்லை!
மிகைபடப் பழகுதல்
மிகுதுயர் செய்யும்!
பகைவர் என்பவர்
பழகி யிருந்தவர்!

தனித்தமிழ்
சிறுவர்
கலையிதழ்

ரல் 3. இசை-1.

# தமிழ்ச்சிட்டு

விலை 20 காசு.



# உங்கள் மடல்கள்

வளப்பம் பொருந்திய மலர்களில் உள்ள தேனை எவ்வாறு தேனீ பருகி மகிழ்கிறதோ, அவ்வாறே தமிழ்ச்சிட்டில் நிறைந்துள்ள கருத்துத் துளிகளைப் பருகி இன்பம் அடைகிறேன்.

–து. பெரியசாமி, ஒன்பதாம் நிலை, இரெ. உயர்நிலைப்பள்ளி, திருச்சி.

மதுவுண்ட மாந்தனைப் போல் மயங்கிக்கிடந்த எங்களது அறிவில் புகுந்திருக்கும் இருளென்னும் அறியாமையைப் போக்கித் தெளிவுறுத்தும் தங்களது பெரும்பணிக்கு எங்கள் வணக்கம்.

–ச. கலைச்செல்வன், தேசிய உயர்நிலைப்பள்ளி, திருச்சி.

எங்களுக்கு இவ்விளமைப் பொழுதிலேயே தனித்தமிழை மட்டுமன்றி, அறிவியலையும் சேர்த்துப் பாடம் புகட்டிவரும் தங்களது தாளாண்மையை எண்ணி மகிழ்கின்றோம். தமிழ்ச்சிட்டைப் படிக்குந்தோறும் நாங்கள் ஓர் அறிவியல் உலகில் இருப்பதாகவே உணர்கின்றோம்.

–கதிரொளி, சேரன்மாதேவி, நெல்லை மாவட்டம்.

சிறுவர்களாகிய நாங்கள் கன்னித்தமிழ்க் கடற்கரையில், அதன்கண் நிறைந்துள்ள செல்வத்தை அறிய ஆவல்கொண்டு நிற்கின்றபொழுது, தமிழ்ச்சிட்டாகத் தாங்கள் காட்சி தந்து, சிறுகச் சிறுக, எங்கள் உள்ளம் மகிழும் வகையில் திங்கட்கொருமுறை சிறந்த அறிவுச் செல்வத்தை வழங்கி வருகின்றீர்கள்.

–செயலர், மாணவர் மன்றம், உலகா உயர்தொடக்கப் பள்ளி,
முத்துக்கிருட்டிணபுரம்.

கன்னிச் செந்தமிழே! கவின்செய் பண்ணமுதே!
இன்றமிழ்ச் சிட்டே! எனைநோக்கி வாராயோ?

செந்தமிழ்த் திருநாட்டார் போற்றும் தமிழ்ச்சிட்டே!
வந்தென் மனத்தினிலே மகிழ்ச்சி விளைப்பாயே!

–பெ. செயமணி (வெற்றிவேந்தன்), சங்கராபுரம்.

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்-3. தி.பி. ௧௯௯௯ (மடங்கல்) ஆவணி செப்–68 இசை- 1.

## தம்பி! நீதான் நாளைய தலைவன்!

தம்பி! நீதான் நாளைய தலைவன்!
வெம்பிய கனிபோல் வீணு காதே!
நம்பிக்கை வை,நீ! நாட்டை நடத்துவாய்!
நல்லன நினைப்பாய்; நல்லன பேசுவாய்!
நல்லன செய்வாய்; நல்லன பெறுவாய்!
சோம்பலை அகற்று; சுறுசுறுப் பாயிரு!
ஓம்புக ஒழுக்கம்! கல்வியால் உயர்வாய்!

கதிரவன் எழுமுன் காலையில் எழுவாய்!
புதிய நூல்படி! பழையன நினைவுகொள்!
அறிவியல் நூல்கள், அறிஞரின் கதைகள்,
நெறிமுறை நூல்கள், நல்லிசைப் பாக்கள்—
எனப்பல நூல்படி; இழிந்த நூல்தவிர்!

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்-பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

அச்சில் வருவன எலாம்நூல் ஆகா.
எச்சில் இலையினில் மீந்தன வற்றை
நாய்உணல் ஆகும்; நாம் உணல் ஆகா!

நோயால் புழுத்தவன் உடலைநல் உடையால்
மூடி வருதல்போல் அறிவிலா மூடர்
எழுதத் தகாதன எழுதிய நூலை
அழகிய அட்டையால் வழவழப் பாக
அச்சிட்டு விற்பர்; அவற்றை விலக்கு!
"கற்க கசடற; கற்பன வற்றை"–
என்றார் வள்ளுவர் இதன்பொருட் டன்றோ?

நாளும் செய்தித்தாள் நன்கு படித்துவா!
தாளெலாம் செய்தித் தாள்கள் ஆகா!
பொய்ப்பன, புளுகைப் புனைவன உண்டு!
உய்ப்பன மக்கட்கு உதவு வன,சில!
திரைப்பட நடிகர் நடிகையர் கதைகளை
உரைப்பன சில! அவர் உருவப் படங்களை
அச்சிட்டு உளத்தை அழிப்பன பலப்பல!
நச்சென அவற்றை நெருங்கவும் நடுங்கு!
"ஒழுங்கிலாக் கல்வி உப்பிலாப் பண்டம்".
ஒழுக்கம் உயிரெனும் குறளுரை உணர்வாய்!

பள்ளிப் படிப்பினில் மனத்தைப் பதியவை!
அள்ளி அள்ளிஉண்; ஆர்வ மொடு,கல்!
கல்வி தருபவர் கல்வித் தந்தை!
செல்வம் என்பது கல்விச் செல்வமே!
பொருள்நலம் புல்லியர் கைகளில் இருக்கும்!
தேயாப் பொருளே கல்விச் செழும்பொருள்!
ஓயாது தேடு! மேம்படு உலகில்!
செம்புது வெள்ளமாய் உலகினில் பாய் நீ!
நம்புவாய் தம்பி,நீ நாளைய தலைவன்!

-பெருஞ்சித்திரன்.

# கழுதை அழுத கதை.

—என்று கழுதை
பலவாய் மனமிடிந்து
நின்றதன் குட்டியிடம்
நீள உரைத்ததுவே.

குட்டி குறுகுறெனக்
கூழை முதுகிட்டே
ஒட்டிக் கிடக்குந்தன்
தாய்மடியில் வாய்வைத்துச்
சப்புச்சப் பென்றுவாய்
சப்பிச் சலித்துவிட்டே,
"இப்பொழுது சொன்னுயே,
என்னை அரசியென
ஆக்குவேன் என்றுயே,
அப்படிஎன் றுல்என்ன?"
என்று வினவிற்று;

ஏக்கமுறத் தாய்க்கழுதை,
"என்னவென்று கேட்கின்றுய்?
என்னவென்று நானுரைப்பேன்!
பொன்னும் பொருளும்
புதுப்பட்டுச் சேலைகளும்
மின்னும் அழகிருக்கும்!
மேனி பளபளக்கும்!
மஞ்சள் குளிப்பிருக்கும்!
மாண்பு மிகுந்திருக்கும்!
துஞ்சும் படுக்கையெலாம்
தூசகன்ற பஞ்சுமெத்தை!
கொஞ்சலென்ன? கூத்தென்ன?
கோடி வணக்கமென்ன?
பஞ்சை வயிற்றுக்குப்
பாலென்ன? சோறென்ன?
காய்ந்த அறுகம்புல்,
கண்டுவந்த நீயினிமேல்

வாய்ந்த உணவையெலாம்
வாயினிக்கத் தின்றிடுவாய்!
இன்னும் பலவிருக்கும்!
ஏனினி வெறும்பேச்சே!
என்னோடு வா,நீ!
இதோநிற்கும் காளையிடம்
சென்று நலங்கேட்போம்."
—என்றே கழுதைத்தாய்
முன்னர் நடந்திடவும்
குட்டியதன் பின்நடக்கும்!

காளையிடம் வந்து
கழுதை கனைப்பெழுப்பத்
தோளைக் குலுக்கிவிட்டுத்
தொங்கும் கழுத்தசையக்
காளை எரிவிழியால்
வந்த கழுதைகளை
மேலிருந்து கீழாகக்
கீழிருந்து மேலாகப்
பத்துமுறை நோக்கிடவே,
குட்டி பதைபதைத்து,
"செத்துத் தொலைந்தோம்"என்
றெண்ணத்தால் செத்தபடி
தாய்க்கழுதை காலடியுள்
தன்னைப் பதுக்கியது.
வாயெடுக்க வாராமல்
வந்த பெருங்கழுதை
ஈரல் குலைநடுங்க
உள்ளெலும்பு தான்குளிர
ஆர இருந்தே,
உடலை அனலேற்றித்
துண்துளியாய் அச்சம்
துடைத்துத் துணிவடைந்து
மண்தரையைப் பின்காலால்
எற்றி மறங்காட்டி,
"நீங்கள் நலமென்றே
யானும் நினைக்கின்றேன்.

ஆங்கொருநாள் உங்களையே
ஆல மரத்தடியில்
கண்டிருக் கின்றேன்; நான்!
ஆனால் பழக்கமில்லை.
விண்டுரைப்ப தோன்றா, உம்
வீங்குகின்ற தோளழகும்,
குத்திட்டு நிற்கும்
திமிலழகும், கொம்பழகும்!
எத்திக்கும் உங்கள்
எழிலை வியந்துரைப்பார்!
காளை அரசே!
கழுதை வணங்குகின்றேன்.
வேலை சரியோ,
சரியிலையோ நானறியேன்–"

என்று நயமாய்
இரும்புளமும் வெண்மெழுகாய்
நின்றுருகி நீராய்
நிலைகுலைந்து போமாறு
மென்று விழுங்கி
மொழியைக் குதப்பிற்று.

பெண்கழுதைப் பேச்சு
பெருங்காளை மாட்டுக்குக்
கண்கவரும் பச்சைப்
பசும்புல் வெளிபோலும்,
செங்கரும்பு போலும்,
செறிந்ததொரு கோடையிலே
பொங்கும் நுரைத்த
புளிநீர் மணம்போலும்,
காவிரி நீரில்
உடல்குளித்த வாறாயும்
ஆவி உருகிடவே
மாலையிலே ஆற்றிடையில்
ஏறத் தொடுக்கும்
இடையன்தென் பாங்கு–எனவும்,

ஐம்புல இன்பத்தை
அள்ளித் தெளித்ததுவே!–
நம்பினால் நம்புங்கள்–
காளையுடல் நாணிற்று!

–தொடரும்.



# பெரியோர் கதை!

# இராபர்ட் கிரீன் இங்கர்சால்.

-சாலை. இளந்திரையன், விராலிமலை.

"பொதுவாக மக்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டைகளாக இருப்பவை அரசுகளும் கோயில்மடங்களுமே. முன்னவை அவர்கட்குக் கைவிலங்குகளாகவும், பின்னவை அவர்கட்கு உயிர்விலங்குகளாகவும் அமைகின்றன. ஆனால் இக்கட்டுகளை யெல்லாம் தகர்த்து விட்டுத் தானாக எண்ணிப்பாராத மாந்தன் அடிமை ஆவான்; அவன் தனக்கும் பிறர்க்கும் கேடு செய்கின்றான்" "அறிவுக்கடலில் கப்பல் விட எவர்க்கும் தடையில்லை. அதுபோல் அறிவு வெளியில் எவர் வேண்டுமானாலும் பறந்து திரியலாம்;" என்றெல்லாம் மாந்த வாழ்வின் உரிமைகளை, சமய அரசியல் கொள்கைகளில் கண்ட சழக்குகளை, போலிக் கொள்கைகளைத் துணிவுடன் கண்டித்தமையால் இங்கர்சாலை 'இறையிலி' என்றும் சிலர் குறை கூறினர். ஆனால், இவரோர் உயர்ந்த மெய்யுணர்வாளர் என்பதை உண்மையான சமய நூல் அறிஞர்களாயின் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

இங்கர்சால் 1833-ஆம் ஆண்டு ஆகஃச்டுத் திங்கள் 11-ஆம் பக்கல் அமெரிக்காவில் நியூயார்க்கு மாநிலத்திலுள்ள 'திரெசுடன்' (டிரெஸ்டன்) என்ற ஊரில் 'இரெவரெண்ட் சான் இங்கர்சால்' என்பவருக்கும் 'மேரி லிவிங்சுடோன்' என்பவளுக்கும் மகனாகப் பிறந்தார். இவர் இரண்டு அகவையை அடைந்தபோது அன்னையாரை இழந்து விட்டார். இவர் தந்தையார் ஆழ்ந்த மதப்பற்றுடைய சமய குரு. ஆதலின் கிறித்துவ மறைநூலில் உள்ள ஒவ்வோர் எழுத்தையும் எண்ணிப் படிக்கும் முனைப்புக் கொண்டவராம். சமயத்தில் அழுந்தியவராயினும் ஈர நெஞ்சத்தையும், நேர்மை உள்ளத்தையும் ஆழ்ந்த அறிவையும் இயல்பாகவே உடையவராம். எனவேதான் இங்கர்சாலை இளமையிலேயே கண்டிப்போடும் கடமை உணர்ச்சியோடும் வளர்த்து வந்திருக்கிறார்.

இங்கர்சால் தந்தையின் கட்டளையை ஏற்றுக் கிறித்துவ மறை நூலை வரிவிடாமல் படித்து அடிக்கடி அவரிடம் ஐயப்பாடுகளைக் கேட்டறிந்து கொள்வார். ஆயினும் இவரின் அறிவு விரிந்தும் ஆழ்ந்தும் நுணுகியும் காணப்பட்டமைபால் வேதநூலைப் படிக்கப் படிக்க ஐயப்பாடுகள் மிகுந்துகொண்டே போயினவாம். எனவே இவர் உள்ளத்தில் உருவான ஐயப்பாடுகளை அகற்ற முடியாது தயங்கிய தந்தை வன்முறையில் அடக்க நினைக்காமல், ''மகனே! நீ உன் உள்ளொளிக்கு மாறின்றிப் பொருள் கொள்க'' என அமைவு கூறியிருக்கிறார்.

இவர் இளமையில் விளையாட்டில் மிகுந்த ஆர்வங்காட்டியிருக்கிறார். ஆயினும் அறிவு முனைப்பில் மிகுந்த ஈடுபாடும் அழுத்தமுங் கொண்டவராம். பள்ளிக்குச் சென்று பாடநூற்களை மனப்பாடஞ் செய்து மூளையில் திணித்துக் கொள்வதிலும், விரிந்த, உரிமையோடு கூடிய கல்வியை விரும்பியிருக்கின்றார். எனவே பிறரிடம் கேட்டறிந்து கொள்ளும் செவிச் செல்வத்திலும், அளவை யாடி அறிந்து கொள்ளும் ஏரணவியலிலும் மிகுந்த அக்கறை காட்டி அறிவை வளர்த்துக்கொண்டிருக்கிறார்.

இருபது அகவையை அடைந்தபோது ஏழை மாணவர்களுக்கென்று ஒரு பள்ளியைத் தாமே நிறுவி இலவசக் கல்வியை அளித்து வந்திருக்கிறார். இக் காலத்திலேயே சட்டநூற்களைக் கற்றுத்தேர்ந்து, 1854-ஆண்டில் தம்மை ஒரு வழக்கறிஞர் எனப் பதிவுசெய்துகொண்டு தொழிலைச் சிறப்புற நடாத்தியிருக்கிறார்.

இவர் 1860-ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தேர்தலில் நின்று 'கெல்லாக்' என்ற நடுவரைத்(நீதிபதியைத்)தோற்கடித்து வெற்றிபெற்றிருக்கிறார். அதன்பிறகு 1861-ஆம் ஆண்டில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரில் நாடு பிளவுபடக்கூடாது என்ற கட்சியின் சார்பில் தீவிரத் தொண்டராய்ப் பணி செய்திருக்கிறார். இவரின் பகுத்தறிவுக் கொள்கையிலும் சொற்பொழிவிலும் ஆழ்ந்த நாட்டம் கொண்டு இவரை ''ஈவா பாக்கர்'' என்ற பெயருடைய பெண் 1862-ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டாளாம். இதன்பிறகு இவரின் அறிவாற்றலுக்குப் பல பதவிகள் நாடி வந்தனவாம். ஆனால் இவர் எல்லாவற்றையும் ஏற்க மறுத்துவிட்டாராம். பதவிக்காகத் தம் கொள்கைகளை விட்டுக் கொடுக்க மனமில்லாமலேயே அணைத்தையும் உதறித் தள்ளிவிட்டாராம்.

அறிவு உரிமைக்காகப் பாடுபடுபவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகளுக்காக வலியச்சென்று முறை மன்றங்களில் ஏறி வழக்காடுவாராம். தம் சொல்வன்மையால் நடுவர்களை மயங்கச் செய்து வழக்குரைஞர்களைத் தம்பக்கம் இழுத்துக் கொள்வாராம். இவரின் அறிவுத் திறனைக்கண்டு அவையோர் அஞ்சி நடுநடுங்குவார்களாம். இப்படிப் பட்ட வழக்குகளில் கலந்து கொண்டு பேசும்போது, "எல்லாச்சமயங்களைக்காட்டிலும் உயர்வானது உரிமை. இத்தகையமேலான இணையற்ற மதிப்புடைய மாந்த உரிமை என்னும் பச்சைக்கல்லை (மரகதத்தை)—மாணிக்கத்தை—காழகத்தைக் காப்பாற்ற நான் எதை வேண்டுமானாலும் இழந்துவிட அணியம்" என்று அழகாக ஆணித்தரமாகப் பேசியிருக்கிறார்.

அரசியல், பொருளியல், குமுகாயவியல் முதலிய பெருந்துறைகளிலும்; மனவியல், அறிவியல், அறவியல், கலை முதலிய நுண்கலைத் துறைகளிலும் பலபடப் புகுந்து ஆய்ந்து கரைகண்டவர். அமெரிக்காவின் குடியரசுத் தலைவரின் ஆண்டு வருமானத்தைப்போல் இரண்டு மடங்குப் பணத்தைத் தம் சொற்பொழிவுகளாலேயே ஈட்டிப் பெரும் பொருள் தொகுத்திருக்கிறார். தொகுத்தவற்றை யெல்லாம் ஏழை எளியவர்களுக்கு வாரி வழங்கிய பெருவள்ளல் இங்கர்சால்.

இத்தகைய கருத்தாளர்-அன்பு நெறியை அனைத்துலகிற்கும் பறைசாற்றிய பெரியார்—அறத்திற்கே அன்புசார் வாழ்க்கையெனும் பட்டாங்கிற்கு இலக்காக வாழ்ந்து காட்டியவர்—உண்மை ஒன்றுக்கே அடிபணிந்து, உரிமை ஒன்றே மாந்த உயிர் எனக் காட்டியவர்—உவமை கூறமுடியாத அளவை அறிஞர்—பகுத்தறிவாளர்—பேரறிஞர் இங்கர்சால் பூத உடலை விட்டு 1899—ஆம் ஆண்டு சூன் திங்கள் 21—ஆம் பக்கல் புகழ் உடலைப் பெற்றார். 0


## தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.

(தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்)

### மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.

| | உள்நாடு. | வெளிநாடு. கொழும்பு. |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் உருபா | 2-50 | 4-00 |
| தனியிதழ் ,, | 0-20 | 0-30 |

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஓரிதழுக்கு 40 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

# உங்களுக்குத் தெரியுமா?

1. ஒரு நாளைக்கு, மாந்தன் ஒருவன் ஏறத்தாழ 25,920 முறைகள் மூச்சு விடுகிறான்.

2. நமது நரம்புகள் உணர்ச்சிகளை மணிக்கு 200 கல் விரைவில் எடுத்துச் செல்கின்றன.

3. நமது உடம்பிலுள்ள உணவுப் பாதையின் நீளம் 30 அடி.

4. நமது உடம்பிலுள்ள மிகச் சிறிய எலும்புகள்: நடுச் செவியிலுள்ள மூன்று எலும்புகள் (இவை வளர்வதேயில்லை)

5. ஒரு மாந்தனின் மூச்சுப் பையில் 300,00,00,00 காற்றுக் கண்ணறைகள் உண்டு.

7. நாம் ஒரு நிமையத்திற்கு 500 சொற்கள் வரை எண்ணலாம். 90 முதல் 150 வரை பேசலாம்.

7. நமது உடம்பிலுள்ள அரத்தம் மணிக்கு 7 கல் விரைவில் செல்கிறது. அஃதாவது நாளொன்றுக்கு 168 கல் தொலைவு. ஓர் ஆண்டில் 60,000 கற்களுக்கு மேல்.

8. மாந்தன் தன் வாழ்நாளில் முதல் அகவையில்தான் மிக வேகமாக வளர்கிறான்.

9. கண்களைத் திறந்து வைத்துக்கொண்டு நம்மால் தும்ப முடியாது.

10. நமது நெஞ்சு (இருதயம்) ஒருநாளைக்கு 1,03,680 முறையும், நிமையத்துக்கு 72 முறையும் அடித்துக் கொள்கிறது.

–தி திருநீலகண்டன், திருநெல்வேலி.

---

## பெரியதும் சிறியதும்

உலகிலேயே மிகப்பெரிய புத்தகம், 2000 ஆசிரியர்கள் சேர்ந்து. எழுதியுள்ள HOLY BIBLE. இதன் நீளம் $5\frac{1}{2}$ அடி; அகலம் 5 அடி; இரண்டு இலக்கம் பக்கங்கள் உள்ளன. இஃது ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் உள்ளது. கி. பி, இரண்டாம் நூற்றாண்டில் இதை எழுதியுள்ளார்கள்.

O

உலகிலேயே மிகச்சிறிய நூல், ரூமன் என்ற யவன ஆசிரியர் எழுதியுள்ள கிறித்தவ வேதநூல். இதன் பரப்பளவு 12ச. விரற்கடை. இதுவும் ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் தற்போது உள்ளது.

–தி, திருநீலகண்டன். திருநெல்வேலி.

# நிலநடுக்கம் பற்றி......

நிலநடுக்கம் பற்றி முன்பே சில செய்திகள் வெளி யாகி யிருந்தன. இந்த இதழில் மேலும் சிலசெய்திகள் வெளியிட்டுள்ளோம்.

0 நிலநடுக்கம் ஏற்படும் முன்னர், சூழ்நிலையில் சில மாறுதல்கள் ஏற்படுகின்றன.

0 இந்த மாறுதல்களை மீன்கள், நாய்கள், பூனைகள் ஆகியன உணர்ந்து கொள்கின்றன.

0 மாறுதல்களை உணர்ந்ததும் மீன்கள் கடலின் மேற்பகுதியிலிருந்து மிக ஆழமான பகுதிக்கு விரைகின்றன. நாய்களும், பூனைகளும் வியப்பான முறையில் நடந்து கொள்கின்றன.

0 நிலநடுக்கங்களில் இரண்டு மூன்று வகைகள் இருக்கின்றன.

0 அண்மையில் 'கொய்னு'வில் ஏற்பட்டது ஒருவகை. எரிமலைகள் வெடிக்குங்கால் நிலநடுக்கம் தோன்றுவது மற்றொரு வகை.

0 நிலநடுக்கத்தின் அதிர்ச்சிகளை அறிந்து அளவிடும் பொறிக்கு 'சிசுமோசிரா:.பு' என்று பெயர்.

0 'சிசுமோகிரா:.பு' மின் ஆற்றலின் உதவியுடன் இயங்குகிறது.

0 இப்பொறி உலகில் எந்த இடத்தில் நில நடுக்கம் ஏற்பட்டாலும், ஏற்பட்ட இடம், அதன் தன்மை, ஆற்றல் ஆகியவற்றை ஒரு வரைபடமாகத் தந்துவிடுகிறது.

0 நிலநடுக்கம் ஏற்படும் முன்னரே, அதை உணர்ந்து அறிவிக்கும் பொறி ஏதும் இன்று வரை கண்டுபிடிக்கப்படவில்லை.

0 நிலநடுக்கங்கள் நில மட்டத்திற்குச் சற்றுக் கீழே அல்லது நில மட்டத்திற்கு நானூறு கல் ஆழத்தில் ஏற்படலாம்.

0 சில கொடூரமான நிலநடுக்கங்களில் பாறைகள் அருவிபோல் கொட்டுமாம்.

0 நிலநடுக்கங்களால் பல இடங்களில் திடீர் திடீரென தீப்பற்றிக் கொள்ளுமாம்.

0 மண்ணின் அடியில், மிகக் கீழே ஏற்படும் ஓர் ஆற்றல் அங்கு உள்ள பாறைகளை அசைக்க முற்படுகின்றது. அப்பாறைகள் இவ் வாற்றலை எதிர்த்து அசைந்து கொடுக்காமல் இருக்க முயலுகின்

றன. இந்தப் போராட்டத்தால்தான் இடையில் நிலநடுக்கம் ஏற்படுகின்றது.

0 ஒரு சிலர் நிலத்தின் அடிப்பகுதியில் மிகுந்த வெப்பமும், தீப் பிழம்புகளும் இருக்கின்றன என்றும், அத்தீப்பிழம்புகளின் வெப்பம் தாங்காமல் நிலம் வெடிக்கின்றது என்றும், அதுவே நிலநடுக்கம் என்றும் கூறுகின்றனர்.

0 உலகில் ஒவ்வோர் ஆண்டிலும் மிகப் பெரிய கொடூரமான நில நடுக்கம் ஒன்றும், பெரிய நிலநடுக்கங்கள் பத்தும் ஏற்படுகின் றனவாம்.

0 இவை தவிர, ஆண்டொன்றுக்கு ஆயிரம் நிலநடுக்கங்களும், இலக்கம் சிறிய நிலநடுக்கங்களும் ஏற்படுகின்றனவாம்.

0 அண்மையில் நம் நாட்டில் 'கொய்ஞ' வில் நிலநடுக்கம் ஏற்பட்ட போழ்து உறுமல் ஒலியும், குண்டு வெடிக்கும் ஒலியும் கேட்டதாம்.

0 இந்த நிலநடுக்கத்தின் போது நில அதிர்ச்சியை அளவிடும் கருவியான 'சிசுமோகிராஃபு' தள்ளும் ஆற்றல், குலுக்கிப்போடும் ஆற்றல் ஆகிய இரண்டு அதிர்ச்சி ஆற்றல்களைப் பதிவு செய்த தாம்.

0 'கொய்ஞ' நிலநடுக்கத்திற்கு, அஃது ஏற்படுவதற்கு இரண்டு மணி நேரம் முன்பு அமெரிக்காவில் ஆய்வுக்காக வெடிக்கப்பட்ட அணுகுண்டுதான் கரணியம் என ஒரு சில அறிஞர்கள் கூறுகின் றனர்.

0 1906-ஆம் ஆண்டு 'சான் பிரான்சிசுகோ' நகரில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் நேர்ந்த இழப்பு இருபது மிலியன் தாலர்களாம். ஆனால் அந் நிலநடுக்கத்தால், தீயினால் ஏற்பட்ட இழப்பு நானூறு மிலியன் தாலர்களாம்.

0 20-ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய நிலநடுக்கம் 1939-ஆம் ஆண்டு 'துருக்கி'யில் ஏற்பட்டதுதான். இதில் 1,00,000 பேர்கள் இறந்து பட்டனர்.

—பெருங்காப்பியன்.

தொடர் நாடகம்.

# இருண்ட வீடு.

மூலக்கதை:- பாவேந்தர் பாரதிதாசன்

நாடக ஆக்கம்:- கு. ஐந்தெழுத்தன்

(பாவேந்தர் பாரதிதாசன் நம்மிடையே வாழ்ந்து மறைந்த சிறந்த தமிழ்ப் பாவலர். அவர் சிறியோர்க்கும் பெரியோர்க்கும் அரிய நூல்கள் பலவற்றைப் பாவடிவிலும் உரைநடை வடிவிலும் நாடக வடிவிலும் இயற்றி யுள்ளார். "இருண்ட வீடு" பாட்டு வடிவிலான சிறந்த நூல். கல்வி யறிவு மிகாத குடும்பம் எவ்வளவு செல்வம் நிறைந்ததாலும் எப்படி எப்படித் துன்பம் எய்தும் என்ற உண்மையை விளக்குவது இந்நூல். நகைச்சுவை மிகுந்த இப் பாவியத்தைச் சிறுவர்க்காக நாடக வடிவில் தருகின்றார் திரு. ஐந்தெழுத்தன். படித்துப்பயனடையுங்கள். ஆ-ர்)

## காட்சி-1.

[காலை நேரம். மணி ஆறரை. வீட்டுத் தலைவி கட்டிலில் உறங்கிக்கொண்டிருக்கிருள். பலகணியின் வழியாகப் பகலவனின் செங்கதிர்கள் பரவியதால், சிறிதே கண்விழித்துப் பின் உறங்குகிருள்.]

[பால்கறக்கும் இரிசன் வந்து, செம்பிற் பாலைக்கறந்து, அதை உறியில் வைக்காமல், உரலின் பக்கத்தே வைத்துப் போகிருன். வீட்டின் தலைவர், தம் சொத்தைப் பல்லைச் சுரண்டியபடியே, சாய்வு நாற்காலியிற் படுத்திருக்கின்ருர்.]

## காட்சி-2.

[நோயால் நலிவுற்ற கைக்குழந்தை, தாய் உறங்குவதைக் கண்டு 'அம்மா, அம்மா' என்று கம்மிய குரலில் கத்துகிறது]

[பெரிய பையன் படுக்கையிலிருந்து எழுந்து, சாம்பலை எடுத்துப் பல் தேய்க்கிருன். அரைத்தூக்கத்தில் இருந்ததால், உரலின் அருகிலிருந்த பாற்செம்பை எடுத்து, வாய் கொப்புளித்து முகம் கழுவுகிருன். பின்னர், செம்பில் இருந்தது பால் என்று அறிந்து, அதை இருந்த இடத்தில் வைத்துவிட்டுத் தந்தையிடம் செல்கிருன்.]

பெரிய பையன்:- அப்பா! அந்த இடப்பயல் செய்த மடச்செயலைப் பார்த்திங்களா? கறந்த பாலிலே முக்கால் பங்குக்கு மேலே கீழே சிந்திட்டுக் கொஞ்சம்தான் மிச்சம் வைச்சிருக்கிறான்.

தலைவர்:- (சற்றே கண்விழித்து) அப்படியா? சோம்பேறிப் பயல்! எங்கயாவது எண்ணத்தை வைச்சிகிட்டு எதையாவது செய்வான்! நாளைக்கு வரட்டும்; நல்லா உதைக்கிறேன்.

## காட்சி-3.

[பிட்டு விற்பவள் வீட்டுக்கதவைத் தட்டுகிறாள். பெரியவன் கதவைத் திறக்கிறான். பிட்டுக்காரி உள்ளே நுழைந்து, தட்டில் வடையும் பிட்டும் வைத்துப் போகிறாள். பையன் அவற்றை வாங்கிக்கொண்டு, பெட்டிமேல் அமர்ந்து தின்னத் தொடங்குகிறான். வயிறு வலிக்கிறது. காலையில் மலம் கழிக்கவில்லை யென்ற நினைவு அப்போதுதான் தோன்றுகிறது. வெளிப்புறம் செல்லுதல் வேண்டும் என்ற உணர்ச்சி ஒருபுறம்; வாயிற்போட்ட வடையை மென்று விழுங்கத் துடிக்கும் எண்ணம் ஒருபுறம். இந்நிலையில் கொல்லைப்புறம் நோக்கி விரைந்து செல்கிறான். வழியில் குறுக்கே படுத்துக் கிடந்த நாயை மிதித்துக் கொண்டு, சட்டிபானைகளை உருட்டித் தள்ளிவிட்டு ஓடுகிறான். அப்போது வழியிற் கட்டியிருந்த கன்றின் கயிறு தடுத்ததால், கால் தடுக்கித் தரையில் விழுகிறான். முன்னம் பற்களில் இரண்டு கீழே விழுகின்றன. வலியைப் பொருட்படுத்தாமல் எழுந்து மேலும் ஓடுகிறான்]

## காட்சி-4.

[நாய் அலறுகிறது. கறவை கதறுகிறது. பானையின் 'பட படா' ஓசை ஒருபுறம். இந்த முழக்கங்களைக் கேட்ட வீட்டுத் தலைவி மெல்ல எழுந்து, தூக்க மயக்கத்தில் தள்ளாடிக்கொண்டே நடக்கிறாள்.]

பெட்டிமேல் தட்டில் இருந்த பிட்டை நாய் தின்பதையும் காணாமல், ஆவின் அருகிற் சென்று, எதிரே கிடந்த சாணத்தை எடுத்து, செம்பில் மீதியிருந்த பாலிற் கரைத்து, தெருக்கதவைத் திறந்து போய், குறட்டில் சாணம் தெளிக்கிறாள்.

முள்ளம்பன்றி சிலிர்த்ததுபோல் விரிந்து கிடக்கும் கூந்தலுடன்,

மந்தி முகத்தினளான அம்மங்கை கோலம் போடுகிருள். தாமரை போலப் போட நினைத்த கோலம், கட்டவிழ்ந்த கட்டைத் துடைப்பம் போலக் காட்சி தருகிறது.]

## காட்சி–5.

[காலை மணி எட்டரை. வீட்டுத்தலைவி தன் கணவன் முன் கைசோர்ந்து குந்திக்கொண்டிருக்கிருள்.]

தலைவர் :– ஏனடீ, மணி என்ன ஆச்சு?

தலைவி:– பாழாப்போச்சு! அந்தக் கடிகாரம் ஓடிஞல்தானே மணிதெரியும்! அதுக்குத் திருகு கொடுக்க அடுத்த வீட்டுக்காரரை அன்னைக்கே கூப்பிட்டனுப்பினேன். வந்தா தானே மாமா?

தலைவர் :– (தெருப்பக்கம் பார்த்து) அதோ பாரடீ, அடுத்த வீட்டுக் கந்தன்! இதுக்குள்ளே வேலையை முடிச்சுட்டு, கருத்தா கடைக்குப் புறப்பட்டுட்டானே!

தலைவி:– அவன் கிடக்கிருன்! அந்த விடியா மூஞ்சி, விடியறதுக்கு முன்னுலே கடைக்குப் போனு, நீங்களும் அப்படியே போகணுமா?

(தன் கணவனைப் பாராட்டுபவள் போலச் சிரிக்கின்ருள்.)

[பெரிய பையன் வாயிற் புண்ணும், கையிற் பாதி வடையுமாய், மெதுவாகத் தாயருகில் வருகிருன்.]

தலைவி:– என்னடா இது? என்னடா உடம்புக்கு?

பையன் :- கீழே விழுந்துட்டேம்மா! ரெண்டு பல் விழுந்துட்டுது; உதடு வீங்கிடுது! வலி தாங்க முடியலே!

தலைவி:– இவ்வளவு தானே! சாணியுருண்டையைப் பூசிஞ சரியாய்ப் போயிடும். அதை அப்புறம் பார்க்கலாம். நீ போய், பிட்டு சாப்பிடு. விடிஞ்ச பிற்பாடு வேலைக்காரி வருவா; பாலைக் காய்ச்சிக் குடிக்கலாம்.

காட்சி-6.

[பெரிய பையன் அழுதுகொண்டே பெட்டியண்டை போகிறுன் பிட்டு முழுவதையும் நாய் தின்றுவிட்டது கண்டு, நரிபோல் ஊளை யிடுகிறுன்.]

[வீடுபெருக்கும் வேப்பும், சமையற்காரி சங்கிலியும் வருகிறுர்கள். கடைக்கணக்கன் வந்து கூடத்தில் அமர்கிறுன்.]

[வடையும் பிட்டும் வாங்கிவந்து, வீட்டுத்தலைவர்முன் வைக்கிறுள், சங்கிலி. பல்லைச் சுரண்டிக் கொண்டிருந்த தலைவர் மெல்ல எழுந்து, காலைக்கடன் கழிக்கச் செல்லுகிறுர்.]

[பெரிய பையன் தட்டை இழுத்துப் பெட்டிமேல் வைத்துக் கொண்டு, வாய்வலியையும் உதட்டு வீக்கத்தையும் பொருட்படுத்தாமல், பிட்டையும் வடையையும் தின்ன முற்படுகிறுன். வாயில் எதுவும் வைக்கமுடியாமல் வருந்துகிறுன்.] -(தொடரும்.)

## பாராளுமன்றத்திற்கு

-பெருங்காப்பியன்.

புதுதில்லியில் உள்ள இந்தியப் பாராளுமன்றத்தை நாம் ''பார்லிமெண்ட்'' என்கிறோம். அதுபோல் பல நாட்டுப் பாராளுமன்றங்களின் பெயர்களைப் படியுங்கள், கீழே!

○ ○ ○ ○

1. மேற்கு செருமனி—பண்டசுடாகு.
2. அமெரிக்கா. —காங்கிரசு.
3. பல்கேரியா. —சூபிரன்சி.
4. பிரான்சு. —நேசனல் அசெம்பிளி.
5. இசுரேல். —நெசட்டு.
6. இத்தாலி. —செனட்டு.
7. சப்பான். —தயட்டு.
8. நார்வே. —இசுடார்டிங்.
9. போர்ச்சுகல் —கார்ட்சு.
10. சுவீடன். —இரிக்சுடாகு.
11. செருமனி. —இரீசு.
12. அயர்லாந்து. —தெய்ல்.
13. பாரசீகம். —மச்லீசு.
14. பிரிட்டன். —பார்லிமெண்ட்.
15. ஐசுலாந்து. —ஆல்திங்.




சென்ற மாதப் புதிரைப் பலர் முயற்சி செய்யாமலேயே விட்டிருப்பீர்கள். சிலர்க்குச் சோம்பல் காரணமாக இருந்திருக்கலாம். சிலர் அந்தப் புதிரைப் பொருட்படுத்தாமலேயே இருந்திருப்பர். இருப்பினும் இதுபோன்ற திருக்குறள் புதிர்கள் நம் திருக்குறள் பயிற்சிக்குத் துணை செய்யும் அன்றோ? இருப்பினும் அப்புதிருக்கு விடையையாவது தெரிந்து கொள்ளுங்கள்.

1. கேட்டினும் உண்டோர் உறுதி; கிளைஞரை
   நீட்டி அளப்பதோர் கோல்.

2. பேதைமை என்பதொன் றியாதெனின் ஏதங்கொண்(டு)
   ஊதியம் போக விடல்.

3. நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்
   குலத்தின்கண் ஐயப் படும்.

4. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
   பேணலர் மேலாய் அவர்.

5. ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
   தோற்றம் நிலக்குப் பொறை.

6. உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
   கற்றான் கருதிச் செயல்.

7. ஊதியம் என்ப தொருவற்குப் பேதையார்
   கேண்மை ஒரீஇ விடல்.

8. செய்க பொருளை; செறுநர் செருக்கறுக்கும்
   எஃகதனில் கூரிய தில்.

9. குறிப்பின் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்
   என்ன பயத்தவோ கண்.

10. நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
    தன்மையான் ஆளப் படும்.

# பறவை, விலங்குகளைப் பார் ......!

சிட்டுக் குருவிபோல் சுறுசுறுப் பாயிரு!

பட்டாம் பூச்சிபோல் அழகாய்ப் புனைந்துகொள்!

குரங்குக் குட்டிபோல் குறும்புசெய் யாதே!

வேங்கைக் குருளைபோல் வீறுகொள், வாழ்வில்!

நாய்போல் பிறர்செய் நன்றி நினைந்திடு!

எலிபோல் பிறரின் ஈட்டம்உண் ணுதே!

காக்கை போலக் கலந்துண்ணக் கற்பாய்!

சிற்றெ றும்புபோல் சிறுகச் சேமி!

பூனைபோல் பதுங்கிப் பொருள்கவ ராதே!

ஆனைபோல் பெருமித மாக நடையிடு!

தேனீப் போல நல்லன நாடு!

குயில்போல் பாடு! மயிலென ஆடு!

கிளிபோல் பேசு! புறவுபோல் இணைந்திரு!

மீன்போல் நீந்து! கன்றுபோல் துள்ளு!

எருமை போலக் கலக்கிஉண் ணுதே!

காளை போலத் தோளை உயர்த்து!

கோழி போலக் குழந்தைகள் பேணு!

சேவலைப் போலச் செம்மாந்து நிற்பாய்!

பாம்பைப் போலப் பதுங்கி இராதே!

முழுநிலாப் போல முகத்தில் ஒளிசேர்!

கதிரவன் போலக் கண்ணொளி ஏற்று!

-துரை-மாணிக்கம்-

# பயன்மொழிகள்.

"விழித்தவனுக்கு இரவு நீடித்திருக்கும். அயர்ந்தவனுக்குப் பயணம் சலிப்பாயிருக்கும். அதுபோல் உண்மை உணர்ச்சி யில்லாத அறிவிலிக்கு வாழ்நாள் துன்பமாயிருக்கும்".

—புத்தர்.

"உன்னைப்பற்றி மதிப்பிடும்போது மற்றவர்களையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மற்றவர்களை மதிப்பிடும்போது உன்னையும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்".

—டெனிச்லான்

"உரிமைகளை இழப்பதைவிட மக்கள் பழையபடி காட்டுமிராண்டிகள் ஆவதே மேல். ஏனெனில் முன்னேற்றத்திற்கு உரிமையே உயிர்; அதுவே வித்து; அதுவே உரம்; அதுவே வெப்பமும் மழையும்; அதுவே காதல்; அதுவே இன்பம்". —இங்கர்சால்.

"மலர்களைச் சுற்றி மணம் கமழும். அதுபோலத்தான் செயற்கரிய செயல்களைச் சூழ்ந்து புகழ் திகழும்". —சாக்கிரடீசு.

"தன் உரிமைகளுக்காகப் போரிடும் துணிச்சல் இல்லாத ஒருவனுக்குத்தன் உரிமைகளுக்கு உரிமைகொண்டாட உரிமை ஏது"?

—டென்னிசன்

"சோம்பிக் கிடப்பது தீமை. நல்ல தொண்டு செய்வது நல்லாண்மை. தேம்பி அழும் பிள்ளைபோல் பிறர் தீமைகண்டு அஞ்சுபவன் கோழை". —பாரதிதாசன்.

"எப்பொழுதும் கீழே விழாமல் இருப்பது புகழுக்குரியதல்ல. விழும்பொழுதெல்லாம் விழித்தெழுதுவதுதான் பெரும்புகழ் பெறுவதற்கான சிறந்த வழி" —கன்பியூசியசு.

"பதினாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருப்பதாகக் கருதி வாழ்க்கையை நடத்தல் வேண்டா. சாவு உறுதி. எனவே செய்யவேண்டிய பணிகளைச் செய்துமுடி." —மார்க் அரேலியர்.

"பாலையின் மணற்பரப்பு கண்ணைப் பறிக்கும் வகையில் பளிச்சிடுகிறது. ஆனால் பயன் எதிர்பார்க்கக்கூடிய கரிசல் நிலத்திலேயே நான் விதைக்க விரும்புகிறேன்." —தாகூர்.

"கிழிந்த ஆடைகளினூடேதான் சிறுசிறு தவறுகளும் நன்கு தெரிகின்றன. பகட்டான பட்டுடைகளுக்குக் கீழே பெருந்தவறுகள் கூட மறைந்து விடுகின்றன" —செகப்பிரியர்.

"கொள்கை இல்லாத மாந்தன் திசையறி கருவி இல்லாத கப்பலைப் போல்வான்."

—ஆவ்பரி.

"ஒருமுறை தவறிவிடு. குற்றமில்லை. ஆனால் ஒரே கல்லால் தடுக்கப்பட்டு இரண்டுமுறை தவறிவிழாதே! அது முட்டாள்தனம்."

—சிசரோ.

தொகுப்பு: 'கதிரொளி' சேரன்மாதேவி.

தென்மொழி மின் அச்சகம் கடலூர்-1.